# திருப்பூர் பின்னலாடைத் தொழில்கள் மீண்டெழத் துணைநிற்போம்!

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவையும், அவரது இணையரையும் அந்நாட்டின் இறையாண்மையை மீறி அந்நாட்டிற்குள் புகுந்து கைது செய்துள்ளது அமெரிக்கா. சர்வதேச சட்ட, திட்டங்களை மீறி வெனிசுலாவை தனது பொருளியல் நலன்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட நாடாக மாற்ற தற்போது அமெரிக்கா எத்தகைய வழிமுறையை கையாண்டுள்ளதோ, அதேபோல தான் தனது பொருளியல் மேலாதிக்கப் போக்கைத் தக்கவைக்க உலக நாடுகள் மீது அதனது வரிக்கொள்கையை பயன்படுத்தி ஒரு அறிவிக்கப்படாத போரை நடத்தி வருகிறது.

அமெரிக்காவின் இந்த அடாவடித்தனத்தால் எப்படி வெனிசுலா பலியாகியுள்ளதோ, அதேப் போன்று தமிழ்நாட்டின் தொழிலுற்பத்தியும் குறிப்பாக திருப்பூரின் பின்னலாடை தொழிலுற்பத்தியும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறது. அது குறித்து விரிவான விபரங்களை இந்த அறிக்கையின் வாயிலாக முன் வைக்கிறோம்.

புதிய பொருளாதார- உலகமய சூழலில் தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சியின் அடையாளங்களில் ஒன்றாக திருப்பூர் பின்னலாடை உற்பத்தித் தொழில்துறை விளங்கி வருகிறது. 1990 களில் இருந்து வேளாண் உற்பத்தி சமூக நிலையில் வாழ்வாதாரத்தை அமைத்து கொள்ள வழி இல்லாதோரின் புகலிடமாக திருப்பூர் விளங்கி வருகிறது. அன்றாட வாழ்க்கைப்பாட்டிற்காக திருப்பூருக்கு இடம்பெயர்ந்தோர் குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குப் பிறகு பின்னலாடை உற்பத்தி சார்ந்த சிறு, குறு முதலீட்டாளர்களாக வளரத் தொடங்கினர்.

இதன் காரணமாக பின்னலாடை உற்பத்தியைப் பொறுத்தவரை திருப்பூரில் இன்று நேரடி ஆடை ஏற்றுமதியாளர்கள் 2,500 தொழிற் நிறுவனங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிறுவனங்களுக்கு ஏற்றுமதியில் துணை செய்கிற நிறுவனங்கள் 20,000 நிறுவனங்கள் உள்ளன.

இதில் கிட்டதட்ட 3.5-4 லட்சம் புலம்பெயர் வடமாநிலத் தொழிலாளர்கள் உட்பட 10- 12 லட்சம் தொழிலாளர்கள் மொத்தமாக பின்னலாடை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தியாவின் அனைத்து விதமான பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூரின் பங்கு என்பது 54 சதவீதமாகவும், பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் 90 சதவீதமாகவும் உள்ளது. இந்தியாவின் குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படும் வகையில் உலக பின்னலாடை சந்தையினுடைய உற்பத்தி மையங்களில் முக்கியமான ஒன்றாக திருப்பூர் பின்னலாடை உற்பத்தி தொழிற் சூழல் (**Eco system**) மாறியிருக்கிறது.

கடந்த ஆண்டு திருப்பூரிலிருந்து ரூ. 44,747 கோடி மதிப்பிலான ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் அமெரிக்காவிற்கு மட்டும் ஏற்றுமதி செய்யப்பட்டதன் பங்கு என்பது 35 சதவீதம் ஆகும்; பண மதிப்பளவில் ரூ. 15,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான ஆடைகள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் இறுதி வாரத்தில், அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்திய உற்பத்தி பொருட்களுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 50% வரி விதித்தார். இதன் காரணமாக அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்து வந்த திருப்பூர் பின்னலாடை உற்பத்தியில் சற்றேறக் குறைய 40 சதவீத உற்பத்தியின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசின் 50% வரி விதிப்பால் திருப்பூர் எதிர்கொண்டுள்ள நெருக்கடியை நேரில் கேட்டறிய எங்களது குழு கள ஆய்வை மேற்கொண்டது. எங்களது குழுவின் கள ஆய்வில் கண்டறிந்த விடயங்கள் பின் வருமாறு,

• அமெரிக்காவின் 50% வரி விதிப்பிற்குப் பின் திருப்பூரினுடைய தொழிலுற்பத்தி நிச்சயமற்ற நிலையை நோக்கி நகர்ந்திருப்பதை எங்கள் குழுவால் கண்டடைய முடிந்தது. நாங்கள் சந்தித்த, திருப்பூர் ஆடை உற்பத்தியில் ஈடுப்பட்டுள்ள பல்வேறு தரப்பு நபர்களும் இதை உறுதி செய்தனர்.

ட்ரம்ப்பின் அறிவிப்புக்கு முன்னர் திருப்பூர் ஏற்றுமதியாளர்களிடத்தில் துணிகளுக்கு கொள்முதல் ஆணை (**Order**) கொடுத்திருந்த அமெரிக்க நிறுவனங்கள் தற்போது அதனை நிறுத்தி வைத்திருக்கின்றன. 50% வரிவிதிப்பிற்கு முன் அமெரிக்காவிற்கு சென்று சேர்ந்த சரக்குகளின் விலையை குறைக்க மேலதிக பேரம் பேசப்படுகிறது. அவை மேலும் 20-30 சதவீத விலை குறைப்பைக் கோருகின்றன.

அமெரிக்க அரசின் கூடுதல் வரி விதிப்பின் காரணமாக திருப்பூர் ஆடை ஏற்றுமதி நிறுவனங்கள் மாதம் ரூ. 2000 கோடி வரை இழப்பைச் சந்திக்க நேரிடும் என மதிப்பிடப்படுகிறது.

இது பற்றி கூறும் திருப்பூர் ஆடை ஏற்றுமதி நிறுவனங்களில் ஒன்றான **RRK** காட்டன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஆர். ராஜ்குமார்,

'திருப்பூர் மற்றும் பல்லடத்தில் எனக்கு 5 தொழிற்சாலைகள் உள்ளன. அதில் சுமார் 2,000 பேர் வேலை செய்து வருகின்றனர். அமெரிக்காவுக்காக தயாரிக்கப்பட்ட ரூ.60 கோடி மதிப்புள்ள பொருட்கள் தற்போது தேங்கிக் கிடக்கின்றன. அமெரிக்க சந்தைக்கு மட்டும் சேவை வழங்கி வந்த 2 தொழிற்சாலைகளை நாங்கள் ஏற்கனவே மூடிவிட்டோம். இதனால் சுமார் 1,000 தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்' என்கிறார்.

• அமெரிக்க ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி நின்று போனதன் உடனடி, நேரடி பாதிப்பை தொழிலாளர்களே எதிர்கொள்கின்றனர். திருப்பூரில் தொழிலாளர்களின் வேலையிழப்பு அதிகரித்து கொண்டேயிருக்கிறது.

திருப்பூர் ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெரும்பாலான தொழிலாளர்கள் முறைசாராத் தொழிலாளர்கள் வகைமையில் பணியில் ஈடுபடுவதால் தொழிலாளர்களது வேலையிழப்பை துல்லியமாகக் கூட மதிப்பிட முடியாத சூழலுள்ளது.

மேலும் குறிப்பிட்ட காலம் மட்டும் திருப்பூரில் குடியேறி பணி செய்துவிட்டு சொந்த ஊருக்குத் திரும்பி, பின்னர் மீண்டும் குறிப்பிட்ட காலம் திருப்பூரில் பணி செய்கிற சுழற்சி முறையிலான தொழிலாளர் முறையே திருப்பூரில் உள்ளது.

உற்பத்தியில் ஈடுபட்டு வந்த தொழிலாளர் சக்தியை விட மேலதிக தொழிலாளர்கள் தேவையிருந்த சூழலில், அமெரிக்கா விதித்த கூடுதல் வரி விதிப்பினால் ஏற்பட்டுவிட்ட நிச்சயமற்ற தன்மையின் காரணமாக கையில் இருக்கிற தொழிலாளர் வளத்தைக் கைவிட விரும்பாத உற்பத்தியாளர்கள், அவர்களுக்கு எவ்வழியிலாவது வேலை வழங்க வேண்டிய நெருக்கடியிலுள்ளனர்.

நாங்கள் சந்தித்த ஏற்றுமதிக்கான உப உற்பத்தியில் ஈடுபடும் முதலீட்டாளர் ஒருவர்,'தமது நிறுவனத்தில் பணி செய்துவந்த தொழிலாளர்கள் 25 பேரில் தற்போது 5 பேருக்கு மட்டுமே வேலை வழங்குவதாக' தெரிவித்தார். அவர் நிறுவனத்தில் பணியிலிருந்த 80 சதவீத தொழிலாளர்களுக்கு தற்போது வேலை இல்லை.

வாரம் ஏழு நாட்கள் பணி செய்தவர்களின் வேலைநாட்கள் தற்போது ஐந்து நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஏற்றுமதியளவான 35-40% உற்பத்தி தற்போது முடங்கியுள்ளதால், அதற்கான உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 35-40% தொழிலாளர்களும் அதாவது 3.5-4 லட்சம் தொழிலாளர்களும் வேலையிழப்பை சந்திக்க நேரிடும் என்பது தெரிய வருகிறது.

மேலும் எங்கள் கள ஆய்வில் கண்டடைந்த மிக முக்கியமான விடயமென்பது திருப்பூர் ஆடை உற்பத்தியில் ஈடுபடும் 10 லட்சம் அளவுள்ள தொழிலாளர்களில் **ESI, PF** பயனாளிகளாக 3.5-4 லட்சம் தொழிலாளர்கள் மட்டுமே அரசின் பதிவுகளில் உள்ளனர்.

முறைசாராத் தொழிலாளர்களாக இருக்கிற, குறிப்பாக புலம்பெயர்த் தொழிலாளர்கள் குறித்த துல்லியமான தகவல்கள் அரசிடமே இல்லை.

அரசின் பதிவுகளில் இல்லாத, முறைப்படுத்தப்படாத சற்றேக்குறைய 6 லட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்தால் கூட அரசின் தரவுகளின் அடிப்படையில், திருப்பூரில் வேலையிழப்பே இல்லை என்பது தான் ஆவணப்பதிவாக இருக்கும்.

திருப்பூர் ஆடை உற்பத்தியில் ஈடுபடுகிற புலம்பெயர்த் தொழிலாளர்கள் உள்ளிட்ட முறைசாராத் தொழிலாளர்களை முறைப்படுத்தி ஆவணப்படுத்தினால் மட்டுமே அதிகாரப்பூர்வமாக தொழிலாளர்கள் பற்றிய மதிப்பீட்டிற்கு வர முடியும்.

. எனவே அரசு, திருப்பூர் ஆடை உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள் குறித்த முழுமையான தகவல்களை அரசின் ஆவணப் பதிவின் கீழ் கொண்டு வர வலியுறுத்துகிறோம். அவர்களுக்கு சிறீணு, ஊைய் உரிமைகளை உத்திரவாதப்படுத்தி கொடுக்க வேண்டுகிறோம்.

. திருப்பூர் ஆடை ஏற்றுமதியாளர்கள் தற்போதைய இழப்பை சந்திப்பது மட்டுமல்லாது இத்தனை காலமும் தாங்கள் வனிகம் செய்து கொண்டிருந்த அமெரிக்க சந்தையை வியட்நாம் மற்றும் வங்கதேச நாடுகளின் ஆடை ஏற்றுமதியாளர்களிடத்தில் பறிகொடுக்க வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது.

ஏற்கனவே இந்தியாவை ஒப்பிடுகையில் சீனா, வியட்நாம், வங்கதேச நாடுகளில் பின்னலாடை உற்பத்திக்காக இறக்குமதி செய்யும் பருத்தி உள்ளிட்ட மூலப் பொருட்கள் மற்றும் உற்பத்தி இயந்திரங்களுக்கு வரி விலக்கு, குறைந்த வரி இருப்பதால் திருப்பூர் உற்பத்தியாளர்களை விட அந்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு குறைந்த உற்பத்தி செலவே ஏற்படுகிறது.

தற்போது அமெரிக்காவின் வரியை எடுத்து கொண்டாலும் இந்தியாவை விட வியட்நாம், வங்கதேச நாடுகளுக்கு குறைந்த வரியே நிலவுகிறது. ஏற்கனவே அதிக உற்பத்தி விலையோடு வியட்நாம், வங்கதேச உற்பத்தியாளர்களோடு மிகக் கடுமையான போட்டியை எதிர்கொண்டிருந்த திருப்பூர் உற்பத்தியாளர்கள், தற்போது அதிக வரியின் காரணமாக அவர்களிடம் அமெரிக்க சந்தையை பறிகொடுப்பதன்றி வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை எனக் கருதுகின்றனர்.

• அமெரிக்காவிற்கான பின்னலாடை ஏற்றுமதி தொடர்பில் பிற நாட்டு உற்பத்தியாளர்களுடனான திருப்பூர் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்கிற போட்டி பற்றி எங்கள் குழு உரையாடுகையில், கடந்த 10 ஆண்டுகளாகப் பின்னலாடை உற்பத்தி சார்ந்த திருப்பூரின் சிறு, குறு உற்பத்தியாளர்கள் சந்திக்கும் வேறு பல பிரச்சனைகளையும் விவரித்தனர். அவை பெரும்பாலும் கடந்த 10 ஆண்டுகளாக ஒன்றிய அரசு இத்தொழில் சார்ந்த சிறு, குறு நிறுவனங்களுக்கு விரோதமாக கொண்டிருந்த தொழிற் கொள்கை பற்றியதாக இருந்தது.

• முதலாவதாக பணமதிப்பிழப்பு நீக்க நடவடிக்கை, திருப்பூர் பின்னலாடை உற்பத்தியை வெகுவாக பாதிப்புக்குள்ளாக்கியிருக்கிறது.

• அந்தப் பாதிப்பு சரியாவதற்குள் கொண்டு வரப்பட்ட ஜி.எஸ்.டி வரி முறை மீண்டும் பேரிடியாக இறங்கியது.

• இதிலிருந்து மீண்டு சமாளிக்கிற முயற்சியைப் பற்றி திருப்பூர் நிறுவனங்கள் சிந்திக்கத் தொடங்கிய சமயத்தில் கொரோனா பெருந்தொற்று அனைத்தையும் முடக்கிப் போட்டிருக்கிறது.

இதன் காரணமாக 2014-15 ஆண்டு சமயத்தில் ரூ. 40,000 கோடி உற்பத்தியை எட்டிவிட்ட திருப்பூர் பின்னலாடை உற்பத்தி, பத்தாண்டுகள் கடந்து இன்றும் அந்த ரூ.40,000 கோடி உற்பத்தி மதிப்பை தான் எட்டிப் பிடித்திருக்கின்றன.

சிறு, குறு தொழில்களுக்கு எதிரான பொதுவான போக்குகள் மட்டுமன்றி, திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதியாளர்களுக்கு நேரிடையான பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பத்தாண்டுகளுக்கு முன்பு நடைமுறையில் இருந்த வரிப் பலன்கள், வரி விலக்குகள் உள்ளிட்டவைகளை ஒன்றிய அரசு நீக்கியுள்ளது. மிகக் குறிப்பாக திருப்பூரிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆடைகளுக்கு இறக்குமதி நாடுகள் விதிக்கும் வரிச்சுமையை ஏற்கும் விதமாக 15 வருடங்களுக்கு முன்பு வரை அரசால் 22.5% வரை ஊக்கத்தொகை (Drawback) கொடுக்கப்பட்டு வந்தது. அது படிப்படியாக குறைக்கப்பட்டு 2-3% சதவீதளவில் மட்டுமே கொடுக்கப்படுகிறது.

உள்நாட்டு- திருப்பூர் ஆடை உற்பத்திக்கு வழங்கி வந்த அரசின் ஆதரவு விலக்கப்பட்டது ஒருபுறமென்றால், மறுபுறம் அதுநாள் வரையிலும் பிறநாட்டு ஆடைகள் இறக்குமதிக்கு இருந்துவந்த கட்டுப்பாடுகளை நீக்கியது மோடி அரசு. இந்திய சந்தையைப் பொறுத்தவரை வங்கதேச ஆடைகள் சந்தையை ஆக்கிரமித்துள்ளன.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் இத்தகைய ஆடை இறக்குமதிக்கு 12% எதிர் மானிய வரி (Countervailing Duty) போடப்பட்டதால், இங்கு ஆடை இறக்குமதி செய்வது கட்டுப்படுத்தப்பட்டது. இப்போது அது முற்றிலுமாக நீக்கப்பட்டு, தங்கு தடையற்ற இறக்குமதி நடைபெறுகிறது. இதன் காரணமாக உள்ளூர் சந்தையில் திருப்பூர் உற்பத்தி ஆடைகளுக்கு இடமில்லாமல் போகிறது.

*(எதிர் மானிய வரி என்பது தங்கு தடையற்ற வர்த்தகம் ஒப்பந்தத்தில் ஈடுப்பட்டுள்ள இரு நாடுகளுடையே, குறிப்பிட்ட பொருளை இறக்குமதி செய்யும் நாடானது, அப்பொருள் உற்பத்தியாகும் நாட்டினுடைய அரசால் அப்பொருளுக்கு உற்பத்தி மானியம் வழங்கப்பட்டிருந்தால், இறக்குமதியின் போது அப்பொருளுக்கு வழங்கப்பட்ட மானியத்திற்கு இணையான மதிப்பை, வரியாக நிர்ணயித்து வசூலிக்கலாம். இதன் காரணமாக இங்கு இறக்குமதி செய்யப்படும் அப்பொருளின் விலையானது உள்ளூர் உற்பத்தி பொருளின் விலையை விட கூடுதலாக மாறிவிடும். அல்லது சற்றேறக்குறைய இணையாக மாறிவிடும். இதனால் இறக்குமதி பொருள், உள்நாட்டு உற்பத்தி பொருளைவிட மலிவான விலைக்கு விற்கப்படுவது தடுக்கப்படுகிறது. உள்நாட்டு உற்பத்தியின் சந்தை பாதுகாக்கப்படுகிறது)*

இதன் விளைவாக 2000 ம் ஆண்டில் வங்கதேசமும், இந்தியாவும் சமமான அளவில் (5 பில்லியன் டாலர் வீதம்) ஆடை ஏற்றுமதியில் ஈடுபட்டு வந்த நிலையில், இன்று இந்தியா 15 பில்லியன் டாலரளவில் ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்க, வங்கதேசமோ 45 பில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது.

இந்த 15 பில்லியன் டாலர் ஏற்றுமதியளவை 2014ம் ஆண்டு சமயத்திலேயே எட்டிய போதும் கூட, இந்த பத்தாண்டு கால அளவில் அதில் எவ்வித ஏற்றமும் நிகழாமல் அப்படியே தேங்கி நிற்கும் நிலைக்கு, ஆடை உற்பத்தியாளர்களுக்குச் சாதகமற்றதான ஒன்றிய அரசின் கொள்கை முடிவுகள் இருந்து வருகின்றன.

மேலும் திருப்பூர் ஆடை உற்பத்திக்குத் தேவையான பருத்தி, செயற்கை நூலிழைகள் போன்ற கச்சா பொருட்களை இறக்குமதி செய்கையில், அவைகளுக்கு 20-25% இறக்குமதி வரி விதிப்பதால், சர்வதேச ஆடை உற்பத்தி மதிப்பைவிட, திருப்பூர் ஆடை உற்பத்தியானது கூடுதல் அடக்க விலைக்கு உற்பத்தி செய்ய வேண்டிய நிலையுள்ளது.

மேலும் கச்சாப் பொருட்களின் இறக்குமதிக்கு பல்வேறு தரக் கட்டுப்பாடுகளின் வழியும் முட்டுக்கட்டை போடுகிறது ஒன்றிய அரசு.

இதன் காரணமாக ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பிற நாட்டு நிறுவனங்களின் ஏற்றுமதி சந்தை விலையோடு திருப்பூர் ஆடை உற்பத்தியாளர்கள் போட்டி போட இயலாத நிலை இருந்து வந்தது.

இந்த நிலையில் குற்றுயிரும், கொலையுயிருமாக போராடிக் கொண்டிருந்த திருப்பூர் பின்னலாடை உற்பத்தியின் நிலை தற்போது அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பால் முற்றிலுமாக கவலைக்கிடமாகியிருக்கிறது.

அமெரிக்கா அல்லாத பிற நாடுகளுக்கான ஏற்றுமதி விற்பனை மற்றும் உள்ளூர் சந்தை விற்பனை என்பவை, திருப்பூர் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு மாற்றுத் தீர்வாக கூறப்படுகிறது.

இதுபற்றி எங்கள் குழு உரையாடுகையில் உற்பத்தியாளர்கள் தரப்பானது,' திருப்பூரின் தற்போதைய உற்பத்தி செலவினங்களைக் கணக்கில் கொண்டால், ஏற்கனவே பிறநாட்டு ஆடை உற்பத்தியாளர்களால் கைப்பற்றப்பட்டுள்ள அமெரிக்கா அல்லாத சந்தையில், அவர்களோடு போட்டி போடுவது கடினம்' என்றனர்.

மேலும் 'உள்நாட்டு சந்தையைப் பொறுத்தவரை முன்னரே குறிப்பிட்டது போல வங்கதேச ஆடைகள் ஆக்கிரமித்துள்ளது மட்டுமல்லாது, இந்தியாவில் தற்போது நிலவும் பொருளாதார நிலையின் காரணமாக மக்களிடம் போதுமான வாங்கும் சக்தி இல்லை' என்பதையும் பதிவு செய்தனர்.

'அமெரிக்கா அல்லாத சந்தைக்கான உற்பத்தி மற்றும் உள்நாட்டு சந்தைக்கான உற்பத்தி என்பவை நீண்டகால நோக்கில் திட்டமிடப்பட வேண்டியவை.

ஆனால் திருப்பூர் உடனடியாக மீண்டு வர, அமெரிக்க அரசுடனான அயலுறவு பேச்சுவார்த்தையே தீர்வாக அமையும்' என்பதை எங்களிடத்திலே பதிவு செய்தனர்.

.இந்திய அரசானது, திருப்பூர் ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இழப்பிலிருந்து அவர்களை பாதுகாக்கிற முயற்சிகளிலேதும் ஈடுபடுவதாய்த் தெரியவில்லை.

'இந்தியாவின் ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்குமதியே'அமெரிக்க அரசின் கூடுதல் வரி விதிப்பிற்கான முக்கிய காரணமாக குறிப்பிடப்படுகிறது. மிகக் குறைந்த செலவில் ரஷ்ய கச்சா எண்ணெய் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட போதும், அதன் பயனை இந்திய மக்கள் யாரும் அனுபவிக்கவில்லை.

இறக்குமதி செய்யப்பட்ட ரஷ்ய கச்சா எண்ணெய்யை இந்தியாவில் சுத்திகரித்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த அம்பானி போன்ற பெருமுதலாளிகளே இதனால் கொள்ளை இலாபமீட்டுகின்றனர்.

அம்பானி போன்ற ஓரிரு குஜராத்தி பனியா பெருமுதலாளிகளின் கொள்ளை இலாபத்திற்காக தீர்மானிக்கப்பட்ட இந்திய அரசின் அயலுறவுக் கொள்கையினால், தமிழ்நாட்டினுடைய திருப்பூரின் ஆயிரக்கணக்கான ஆடை உற்பத்தியாளர்கள் நட்டமடைந்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

பிரேசில், சீனா போன்ற நாடுகள் மீது அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பையொட்டி தொழில் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பை அந்நாட்டு அரசுகள் தாங்கள் ஏற்றுகொள்வதாகக் கூறி தொழிலுற்பத்தியாளர்களை இழப்பிலிருந்து பாதுகாக்கின்றன.

அதுபோன்று இந்திய அரசும், தனது அம்பானி சார்பால் பாதிப்படைந்துள்ள திருப்பூர் தொழிலுற்பத்தியாளர்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்கி அவர்களை பாதுகாக்க வேண்டும்.

.பின்னலாடை உற்பத்திக்குத் தேவையான பருத்தி உள்ளிட்ட மூலப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். குறிப்பாக பருத்தி இறக்குமதிக்கு நிரந்தர வரி விலக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

.திருப்பூர் பின்னலாடை உற்பத்தியாளர்களின் வங்கிக் கடனுக்கு குறிப்பிட்ட காலம் தளர்வளிப்பதுடன், வட்டியில்லா புதிய கடன்களை வழங்கிட ஒன்றிய அரசு ஆவண செய்ய வேண்டும்.

.அமெரிக்காவிற்கான ஏற்றுமதி பிரச்சனை சீராகும் வரையிலும், திருப்பூர் பின்னலாடை உற்பத்திக்குத் தமிழ்நாடு அரசு மின்சாரக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

.திருப்பூர் பின்னலாடை உற்பத்தியில் ஈடுப்பட்ட வந்த தொழிலாளர்களுக்கு உரிய தொழிலாளர் உரிமைகளை உறுதி செய்வதுடன், இந்நெருக்கடி காலத்தை கடப்பதற்கு அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

ஒன்றிய அரசினுடைய தோல்வியடைந்த அயலுறவுக் கொள்கையே, திருப்பூர் எதிர் கொண்டிருக்கும் இன்றைய நெருக்கடிக்கான முழுமுதற் காரணமாக பார்க்கிறோம்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுக்கும் கூடுதல் வரி விதித்த போதிலும், அதில் பல நாடுகள் அமெரிக்காவுடனான தங்களுடைய வர்த்தக பேச்சுவார்த்தையின் மூலம், ஒரு தீர்வை கண்டிருக்கின்றன. ஆனால் ஒன்றிய அரசோ அமெரிக்காவுடனான வர்த்தக பேச்சுவார்த்தையின் வழி அமெரிக்காவிற்கான இந்திய ஏற்றுமதி தொடர்பான பிரச்சனைக்குத் தீர்வை கண்டடையாமலே உள்ளது.

ஓரிரு குஜராத்-பனியா பெருமுதலாளிகளின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு, ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டு சிறு, குறு முதலாளிகள் மற்றும் லட்சக்கணக்கான தொழிலாளர்களது வாழ்வாதாரத்தை ஒன்றிய அரசு கேள்விக்குள்ளாக்கி வருகிறது.

இந்திய அயலுறவுக் கொள்கையும், தொழிற் கொள்கையும் பரந்துபட்ட பல் தேசிய இனங்களது நலனை பிரதிநிதித்துவப்படுத்தாது, குஜராத்திய பனியா முதலாளிகளது முதலீட்டு நலனுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதாலேயே, அதனது அயலுறவு மற்றும் தொழிற் கொள்கையில் தமிழ்நாட்டின் 40,000 கோடி வர்த்தகம் பொருட்படுத்தப்படாமல் இருப்பதாக பார்க்கிறோம்.

இந்தியா, ஐந்து ட்ரில்லியன் டாலர் பொருளாதார உற்பத்தி இலக்கை நோக்கி பயணிக்க, தமிழ்நாடோ ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார உற்பத்தி இலக்கை நோக்கி பயணிக்கிறது. ஒட்டுமொத்த இந்திய உற்பத்தி இலக்கில் ஐந்தில், ஒரு பங்கு; அதாவது ஒட்டுமொத்த இந்திய பொருளாதார உற்பத்தியில் 20 சதவீதம் பங்களிக்கக்கூடிய இடத்தை நோக்கி தமிழ்நாடு முன்னேறி வருகிறது.

தமிழ்நாட்டு முதல்வர் பல்வேறு நாடுகளுக்கும் சென்று அந்நிய முதலீட்டை தமிழ்நாட்டிற்குள் கொண்டுவரும் ஒப்பந்தங்கள் மேற்கொள்வதை பார்க்கிறோம். இவை ஒன்றிய அரசின் அயலுறவுத் துறை அமைச்சகத்திற்குட்பட்ட நேரடி வகையிலான பங்கேற்பாக இல்லையென்றாலும், அடிப்படையில் இந்திய அயலுறவுத் துறை அமைச்சகம் உலகநாடுகளுடன் வர்த்தக ரீதியாக மேற்கொள்கிற பேச்சுவார்த்தையை ஒத்ததாகவே தமிழ்நாட்டு அரசினுடைய ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் அமைகின்றன.

உலக நாடுகளுடனான வர்த்தக உறவின் பொருட்டு இந்திய அரசின் அயலுவுறக் கொள்கையில் பங்கெடுக்க வேண்டிய வரலாற்றுக் கட்டத்தை நோக்கி தமிழ்நாடு நகர்ந்திருப்பதையே இது காட்டுகிறது. தமிழ்நாடானது உலக நாடுகளுடனான வர்த்தகத்தில் தனது வகிபாகத்தை உறுதிப்படுத்த வேண்டிய கட்டத்தை நோக்கி வந்தடைந்துள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு அரசிற்கு, தனது ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார உற்பத்தி இலக்கில் பயணிக்கும் தமிழ்நாடு சார்ந்த முதலீட்டாளர்களுக்கு 'நம்பிக்கைக்குரிய சூழலை' உருவாக்கித் தர வேண்டிய பொறுப்பும் இருக்கிறது.

தமிழ்நாடு அரசானது பெரம்பலூர்/ அரியலூர் காலணி தொழிலுற்பத்தி மண்டலம், தூத்துக்குடியை மையப்படுத்தி சர்வதேச அறைக்கலன் பூங்கா (**International Furniture Park**) என பல்வேறு பிராந்தியம் சார் தொழிலுற்பத்தி மண்டலங்களுக்குத் திட்டமிட்டு வருகிறது.

உலகமயமாக்கல் தொடங்கப்பட்ட காலத்தை மிக சிறப்பாக பயன்படுத்திக் கொண்ட திருப்பூர் பின்னலாடை உற்பத்தி என்பது தமிழ்நாட்டினுடைய பிராந்தியம் சார் தொழிலுற்பத்தி மண்டலத்திற்கான மாதிரியாக (**Model**), அடையாளமாக விளங்குகி வருகிறது.

அத்தகையத் திருப்பூரின் இன்றைய நெருக்கடி சூழலை இந்திய அயலுறவுக் கொள்கைக்குள் தலையிட்டு, தமிழ்நாடு அரசு தீர்க்க முடியாத நிலையுள்ள போது, பிற பிராந்தியம்சார் தொழிலுற்பத்தி மண்டலங்களின் எதிர்கால நிலை குறித்த நிச்சயமற்றதன்மையே மேலிடுகிறது.

தமிழ்நாட்டுப் பொருளாதார வளர்ச்சி என்பது இந்திய அயலுறவுக் கொள்கையில் தமிழ்நாட்டினுடைய பிரதிநித்துவமின்றி முழுமையடையாது என்பதே திருப்பூரின் இன்றைய நிலை நமக்கு உணர்த்தும் செய்தியாக இருக்கிறது.

ஒட்டுமொத்த இந்திய சரக்கு கப்பல் போக்குவரத்தில் சென்னை காமராஜர் துறைமுகத்தின் பங்கு என்பது சற்றேறக்குறைய 25 சதவீதம் ஆகும். மேம்படுத்தப்படும் தூத்துக்குடி வ.உ.சி துறைமுகமானது 50 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாளுவதை நோக்கி ஏற்கனவே நகர்ந்துவிட்டது.

இந்தோ- பசிபிக் கடற்பிராந்தியத்தின் மிக முக்கியமான புவிசார் அமைவிடத்திலுள்ள இத்துறைமுகங்கள் புவிசார் அரசியல் நோக்கிலும், இந்தியாவின் மிகப் பெரும் கிழக்குக் கடற்கரையோர எல்லை மாநிலம் என்றளவிலும் இந்திய அயலுறவுக் கொள்கையில் தமிழ்நாட்டின் பங்கேற்பை கோருவதாக உள்ளது.

கூட்டாட்சி அரசியல் உரிமை பேசுவோர் கூட ஒன்றிய அரசு கொண்டிருக்க வேண்டிய சில முக்கியத் துறைகளில் அயலுறவுத் துறையையும் குறிப்பிட்டே பேசுவர். ஆனால் இன்று தமிழ்நாடு அடைந்திருக்கும் தொழில் வளர்ச்சியானது, அயலுறவுக் கொள்கையிலும் தமிழ்நாடு அரசின் பங்கேற்பை கோருகிற இடத்திற்கு நம்மை அழைத்து வந்திருக்கிறது.

எனவே திருப்பூர் எதிர் கொண்டிருக்கும் இன்றைய தொழில் நெருக்கடி மட்டுமன்றி, தமிழ்நாடு எதிர்கொள்ள இருக்கும் பல்வேறு எதிர்கால நெருக்கடிகளையும் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசானது இந்திய வெளியுறவுக் கொள்கையில் பங்கேற்க வேண்டுமென்பதை இந்த அறிக்கையின் வாயிலாக முன் வைக்கிறோம்.

அயலுறவுத் துறை அமைச்சகமானது மாநில அரசுகளை உறுப்புகளாகக் கொண்ட குழுவாக அமைக்கப்பட வேண்டுமென்பதை தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்கள், அமைப்புகள் வலியுறுத்த வேண்டுமென்பதை இச்சமயத்திலே கேட்டுக்கொள்கிறோம்!

**1.சிந்தனைச் செல்வன்**
சட்டமன்ற உறுப்பினர்,
மாநிலப் பொதுச் செயலாளர்,
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

**2.பொன்.முத்துராமலிங்கம்,**
முன்னாள் அமைச்சர்,
உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்,
திராவிட முன்னேற்றக் கழகம்

**3.ப.அப்துல்சமது**
சட்டமன்ற உறுப்பினர்,
பொதுச்செயலாளர்,
மனிதநேய மக்கள் கட்சி

**4.தி.வேல்முருகன்**
சட்டமன்ற உறுதிமொழிக் குழுத் தலைவர்.
தலைவர்,
தமிழக வாழ்வுரிமைக் கட்சி

**5. மு.தமிமுன் அன்சாரி**
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
தலைவர் மனிதநேய ஜனநாயக கட்சி

**6.நெல்லை முபாரக்**
மாநிலத் தலைவர், SDPI கட்சி

**7.தோழர்.பஷீர் அகமது**
மாநிலத் தலைவர்,
இந்திய தேசிய லீக்

**8.கே.எம். சரீப்**
தலைவர் , தமிழக மக்கள் ஜனநாயக கட்சி

**9.திருப்பூர் ஹாலிதீன்**
பொதுச்செயலாளர்
ஐக்கிய முஸ்லீம் முன்னேற்றக் கழகம்.

**10.வழக்குரைஞர்**
**சே. பசும்பொன் பாண்டியன்**
நிறுவனர், அண்ணா திராவிட
மக்கள் முன்னேற்றக் கழகம்

**11.கு.இராமகிருஷ்ணன்**
பொதுச்செயலாளர்
தந்தை பெரியார் திராவிடர் கழகம்

**12. கொளத்தூர் மணி**
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

**13.தோழர்.தியாகு**
பொதுச்செயலாளர்,
தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம்

**14.கோவை இரவிக்குமார்,**
பொதுச்செயலாளர்,
ஆதித்தமிழர் பேரவை

**15.தோழர். பொழிலன்**
ஒருங்கிணைப்பாளர்
தமிழக மக்கள் முன்னணி

**16.தோழர். வெண்மணி**
தலைவர் , திராவிடத் தமிழர் கட்சி

**17.தோழர் நாகை திருவள்ளுவன்**
தலைவர் , தமிழ்ப்புலிகள் கட்சி

**18.தோழர். வாலாச வல்லவன்**
துணைப் பொதுச்செயலாளர்
மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி

**19.தோழர். மீ.த.பாண்டியன்**
அரசியல் தலைமைக் குழு ,
மிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி – மா.லெ.மாகட்சி

**20.கு.ஜக்கையன்**
தலைவர், ஆதித்தமிழர் கட்சி

**21.தோழர்.வெற்றிவேல் செழியன்**
மாநிலச் செயலாளர்
மக்கள் அதிகாரக் கழகம்

**22. தோழர்.திருச்சி செழியன்,**
மாநில பொதுச் செயலாளர்
மக்கள் அதிகாரம் தமிழ்நாடு – புதுவை

**23.வழக்குரைஞர் சே. வாஞ்சிநாதன்**
மக்கள் உரிமை பாதுகாப்பு மையம்

**24.கே எஸ் அப்துல் ரஹ்மான்**
மாநிலத் தலைவர்
வெல்ஃபேர் கட்சி தமிழ்நாடு

**25.தோழர்.தேவதாசு**
தலைமை ஒருங்கிணைப்பாளர்,
ஐந்திணை மக்கள் கட்சி

**26.சுப. மனோகரன்**
மாநிலச் செயலாளர்
சிபிஐ எம்.எல் (ரெட் ஸ்டார்)

**27.சி. செல்லச்சாமி**
மாநிலச் செயலாளர்
இந்திய புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி

**28.பேராசிரியர் த.செயராமன்**
நெறியாளர் ,
தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

**29.பொ.மு.இரணியன்**
தலைவர், வனவேங்கைகள் கட்சி

**30.கி.வே. பொன்னையன்,**
தற்சார்பு விவசாயிகள் சங்கம்

**31.தோழர்.மணிபாபா**
தலைவர் , தமிழக வாழ்வுரிமைப்
பாதுகாப்பு மக்கள் கட்சி

**32.அ.சி. சின்னப்பத் தமிழர்**
தமிழ்வழிக்கல்வி இயக்கம்

**33.தோழர். நிலவழகன்**
தலைவர் , மக்கள் தமிழகம் கட்சி

**34.துரைசிங்கவேல்,**
தலைவர், மக்கள் சனநாயக
அமைப்பு சாரா தொழிற்சங்கம்.

**35.திருப்பதி முத்துகிருஷ்ணன்**
இணைச்செயலாளர் TCEA (Tirupur
Computer Enbroiderers Association)

**36.பாரதி சுப்பராயன்**
நவீன மனிதர்கள் , திருப்பூர்.

**37.மனிதி செல்வி**
ஒருங்கிணைப்பாளர்
மனிதி அமைப்பு

**38.தோழர். கணகுறிஞ்சி**
ஒருங்கிணைப்பாளர்
தமிழ்நாடு மக்கள் உரிமைப் பேரவை

**39.பேராசிரியர் இரா. முரளி**
மாநிலத் தலைவர்
மக்கள் சிவில் உரிமைக் கழகம்

**40.க.இரா.தமிழரசன்**
தமிழ்த்தேசக் குடியரசு இயக்கம்

**41.பேரா. இராமு. மணிவண்ணன்,**
மேனாள் துறைத் தலைவர்,
அரசியல் அறிவியல் &
பொதுநிர்வாகவியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்

**42.ஆழி செந்தில்நாதன்,**
ஒருங்கிணைப்பாளர்
மொழி நிகர்மை உரிமை பரப்பியக்கம்

**43.பேராசிரியர். ஜெ.அமலநாதன்**
மேனாள் பொருளியல் துறைத் தலைவர்,
தூய சவேரியார் கல்லூரி , நெல்லை.

**44.வழக்குரைஞர்**
**து.இராஜா**
குடியுரிமைப் பாதுகாப்பு நடுவம்

**45.தோழர்.தம்பி மண்டேலா**
ஒருங்கிணைப்பாளர்,
மக்கள் குடியரசு கட்சி – தமிழ்நாடு

**46.தோழர். ரமணி**
சாதி ஒழிப்பு முன்னணி

**47.ஜோஸ் ஃப்ரீட்,**
செயற்குழு உறுப்பினர்,
தமிழ்நாடு சுயாட்சி இயக்கம்.

**48.தோழர். அருண்நெடுஞ்செழியன்**
சூழலியல் எழுத்தாளர்.

**49.சம்சுதீன் ஹீரா**
எழுத்தாளர் , திருப்பூர்.

**50.இளங்கோவன் இராஜசேகரன்**
மூத்த பத்திரிக்கையாளர்.

**51.தோழர் முத்தையா**
ஆசிரியர்,
காக்கைச் சிறகினிலே இதழ்

**52.இர.இரா.தமிழ்க்கனல்,**
ஊடு ஆய்விதழ், சென்னை

**53.ஹசீப் அஹமது,**
ஊடகவியலாளர்.

**54.சத்தியராஜ் குப்புசாமி,**
ஊடகவியலாளர்
Madras Review

**55.விவேகானந்தன்**
ஊடகவியலாளர்

**ஒருங்கிணைப்பு:**

**புரட்சிகர இளைஞர் முன்னணி, மதுரை**
**பெரியாரிய அம்பேத்கரிய மக்கள் இயக்கம்**
**கூட்டாட்சியியல் மையம், தமிழ்நாடு**

**தொடர்புக்கு: 9962649865, 84281 08721, 9500410309**